DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 366/2023

Prosecution PW 1

Deposition of Witness for Defence

Court

Name : சுப்பிரமணியன்

Father's Name : நாச்சியப்ப கவுண்டர்

Village :

Taluk :

District :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 29.12.2025

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

1. நான் கரூர் செங்குந்தபுரத்தில் குடியிருந்து சொந்தமாக அஞ்சு பேப்ரிக்ஸ் என்ற பெயரில் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனம் நானும், எனது மைத்துனர் அம்மையப்பனும் கூட்டாக சேர்ந்து நடத்தி வருகிறோம். நான் பார்ட்னராக உள்ளேன். கணக்கு வழக்குகளை நானும், எனது மைத்துனர் மகன்களான கேசவன் மற்றும் மேனேஜர் கண்ணன், ராஜன் டேவிட் ஆகியோர்கள் கவனித்து

வந்தனர். எங்கள் நிறுவனத்தில் தயார் செய்து வரும், டெக்ஸ்டைல்ஸ் தயாரிப்புகளை வட இந்திய மாநிலங்களுக்கு விற்பனை செய்து வருகிறோம். தரி (லூம்) மெஷின் வைத்து தயார் செய்து வருகிறோம். அந்த துணிகளுக்கு டிசைன் போடும் ஜக்காட் மிஷின் வேண்டி தாசன் இண்டஸ்டிரியல் பிரைவேட் லிமிடெட்டில் தொடர்பு கொண்டபோது, ஆஜர் எதிரி அங்கு பணிபுரிந்து வந்தார்.

2. பின்னர், அவர் கோல்டன் ஸ்டார் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனம் ஆரம்பித்திருப்பதாகவும் அந்த கம்பெனி பெயரில் பணம் அனுப்பி வைத்தால் மெஷினை டெரிவரி செய்வதாக கூறியதன் பேரில் ஆர்டர் செய்தோம். அந்த நிறுவனத்தின் உரிமையாளர் ஆஜர் எதிரிதான். ஜக்காட் மெஷினுக்காக ( 6 எண்ணிக்கை ) ஒரு ஜக்காட் மெஷின் விலை ரூ.9,50,000/- என பேசி அவர் பர்பாம் இன்வாய்ஸ் அனுப்பி வைத்தார். பணத்தை கோல்டன் ஸ்டார் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்திற்கு பணத்தை அனுப்பச் சொன்னதன்பேரில் 6 மெஷினுக்கு ரூ.57,00,000/-மும், ஜி.எஸ்.டி. ரூ.10,26,000/-மும் ஆக மொத்தம் ரூ.67,26,000/- 18.06.2022 ம் தேதி தமிழ்நாடு மெர்க்கண்டையன் வங்கியின் மூலம் ரூ.5,70,000/-த்தை ஆஜர் எதிரியின் நிறுவனத்தின் பெயருக்கு எச்டிஎப்சி வங்கிக்கு அனுப்பினேன். 03.10.2022 ம் தேதி ரூ.22,80,000/- எனது அஞ்சு பேப்ரிக்ஸ் எங்களது கம்பெனி வங்கியான தமிழ்நாடு மெர்க்கண்டையன் வங்கியின் மூலம் ஆஜர் எதிரியின் நிறுவனத்தின் வங்கியான எச்டிஎப்சி வங்கிக்கு அனுப்பி வைத்தேன். 01.11.2022 ம் தேதி ரூ.17,00,000/-த்தை எனது அஞ்சு பேப்ரிக்ஸ் எங்களது கம்பெனி வங்கியான தமிழ்நாடு மெர்க்கண்டையன் வங்கியின் மூலம் ஆஜர் எதிரியின் நிறுவனத்தின் வங்கியான எச்டிஎப்சி வங்கிக்கு அனுப்பி வைத்தேன். ஆக மொத்தம் ரூ.45,50,000/- அனுப்பி வைத்தேன். ஆஜர் எதிரி மெஷினை எனக்கு சப்ளை செய்யவில்லை.

3. ஆஜர் எதிரி பணத்தை பெற்றுக்கொண்டதற்கான இமெயில் மூலம் எங்களுக்கு 22.11.2022 அன்று தகவல் கொடுத்தார். பின்னர், அவரை நாங்கள் தொடர்பு கொண்டபோது, அவர் எந்தவிதமான பதிலும் சொல்லவில்லை. பின்னிட்டு, ரூ.5,70,000/-ஐ அஞ்சு பேப்ரிக்ஸ் வங்கியான தமிழ்நாடு மெர்க்கண்டைல் எனது வங்கிக்கு அனுப்பி வைத்தார். பிறகு அவரை தொடர்புகொள்ள முடியவில்லை. அவரை கண்டுபிடிக்க முடியவில்லை. இது சம்மந்தமாக கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் ஆங்கிலத்தில் கணினி தட்டச்சு செய்யப்பட்டது. அந்த புகாரை எனது மகன் படித்து காண்பித்தார். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது.

**4. புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புரோ பார்மா இன்வாய்ஸ் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி மூலம் ஆர்டிஜிஎஸ் மூலம் ஆஜர் எதிரி கோல்டன் ஸ்டார் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்திற்கு அனுப்பிய தொகை குறித்த வங்கி குறிப்பு அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியின் வங்கி கணக்கில் ரூ.5,70,000/-, 22,80,000/-, 17,00,000/- பரிவர்த்தனை ஆனதற்கான எதிரி வங்கியான எச்டிஎப்சியின் ஸ்டேட்மெண்ட் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரியின் ஜிஎஸ்டி எண்ணுடன் கூடிய கோல்டன் ஸ்டார் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தின் ஆஜர் எதிரி போட்டோ உடன் கூடிய பதிவுகள் மற்றும் ஆஜர் எதிரி ரூ.5,70,000/-, 22,80,000/-, 17,00,000/- பெற்றுக் கொண்டதற்கான மெயில் ஆகியவை தாக்கல் செய்யப்படுகிறது.** அதன் பிறகு குற்றப்பிரிவு போலிசாருக்கு அனுப்பப்பட்டு, குற்றப் பிரிவு போலிசார் வழக்கு பதிவு செய்தனர். போலிசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் முதல் விசாரணையில் தாக்கல் செய்த மின்னஞ்சலிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணங்கள் தொடர்பாக இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65 பி சான்றிதழ் தாக்கல் செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./−எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**